அலகுப்பரீட்சை (அலகு 1)
Unit Examination (Unit 1)

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தர) ப் பரீட்சை
General Certificate of Education (Adv. Level) Examination

அரசியல் விஞ்ஞானம் **Political Science**	23	T	I&II	2 மணி 30 நிமிடம் **Two hour 30 Minutes**

P.T.M. Ameen BA, PGDE (Merit), SLTS Contact No: 0772273916

பின்வரும் வினாக்களுக்கு மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க

01. அரசியல் என்பது
    1. சமூக வாழ்க்கையின் அத்தியவசியமான ஓர் அங்கம்
    2. அரசறிவியல் எனவும் பொருள்படும்.
    3. அரசியலை கற்பதனைக் குறிக்கின்றது.
    4. அரசியல் விஞ்ஞானத்துடன் தொடர்பற்றது.
    5. அரசியல் போராட்டத்தின் கோட்பாட்டு வடிவம்.

02. அரசியல் செய்தல் என்பது
    1. பிரயோக அரசியலைக் கற்றல்
    2. அரசியலை கல்வித்துறைசார்ந்த துறையாகக் கற்றல்
    3. அரசியல் அதிகாரத்தின் போராட்டம்.
    4. அரசு, அரசாங்கம் என்ற ஒழுங்கமைப்புக்களை அறிதல்.
    5. பொதுக்கொள்கைகளையும் அவற்றின் நடைமுறைகளையும் ஆய்வுசெய்தல்.

03. அரசியல் என்பது
    1. தேர்தல் செயன்முறைகளோடு வரையறுக்கப்பட்ட பயன்பாடாகும்.
    2. அரசாங்க பரப்போடு மட்டும் வரையறுக்கப்பட்ட அதிகார போராட்டமாகும்.
    3. சமூக விஞ்ஞானத்துடன் அண்மைக்காலத்தில் இணைந்ததாகும்.
    4. அரசு மற்றும் சமூகத்துக்கிடையில் நிகழும் அதிகார தொடர்பாகும்.
    5. பொதுத்துறை நிர்வாகத்தோடு வரையறுக்கப்பட்ட செயன்முறையாகும்.

04. அரசறிவியல் என்பது
    1. அரசியல் கட்சிகளினதும் அரசியல் வாதிகளினதும் செயற்பாடுகளை மட்டும் ஆராயும் ஒரு கற்கையாகும்.
    2. அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த மனித சமூகத்தில் அரசியல் போராட்டத்தை நடைமுறைப்படுத்தும் பிரயோகச் செயன்முறையாகும்.
    3. மூலக்கொள்கையில் ஒருமைத் தன்மையைக் கொண்டிருக்கும் கற்கையாகும்.
    4. காரணகாரிய அடிப்படையில் எக்காலத்துக்கும் பொருத்தமான எதிர்வுகூறலை முன்வைக்கும் கற்கையாகும்.
    5. இயற்கையின் பொருள் மற்றும் இயல்புபற்றி அணைத்துலக பொதுவான கருத்துக்கள் முன்வைக்கப்படவில்லை.

05. அரசியலை கல்வித்துறையாகக் கற்றல் என்பது
    1. நாளாந்த வாழ்க்கை மூலம் பெற்றுக்கொள்ளும் அறிவு
    2. ஊடகங்களின் மூலம் பெற்றுக்கொள்ளும் அறிவு
    3. தனது தனிப்பட்ட விருப்பு வெறுப்பு நம்பிக்கைகள் இதில் உள்ளடங்கும்.
    4. அரசியல் நடைமுறை ஊடகத்தை மையமாகாக் கொண்ட அறிவு.
    5. குடும்பம்,அயலவர் மற்றும் நண்பர்கள் மூலம் பெற்றுக்கொள்ளும் அறிவு.

06. அரசாங்க கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அரச நிருவாகச் செயற்பாடுகளை மேற்கொள்வது பின்வருனவற்றுள் எது?
    1. அரசாட்சி
    2. அரசியல் நடைமுறை
    3. அரசியல் நடத்தைகள்
    4. அரசியல் கருத்தியலகள்
    5. அமுக்கக் குழுக்கள்

07. அணுகுமுறைகள் தொடர்பாக தவறான கருத்து
    1. அரசியல் பொருளாதார அணுகுமுறை மூலம் அரசியல் பொருளாதாரம் எனும் கற்கைநெறி தோற்றம் பெற்றது.
    2. பெண்ணிலை, புதிர், பாலியல் அரசியல் எனும் நூல்களில் பெண்ணியல்வாத அணுகுமுறை கூறப்பட்டுள்ளது.
    3. அபிவிருத்தியடைந்து வரும் பிராந்தியங்களின் அரசியல் எனும் நூலில் ஒப்பீட்டு அரசியல் கூறப்பட்டுள்ளது.
    4. நடத்தைவாதமானது மனிதனின் அரசியல் நடத்தையில் பாதிப்புச் செலுத்தும் மாறிகளை ஆய்வு செய்கிறது.
    5. பன்மைத்துவவாத அணுகுமுயில் அரிஸ்டோட்டில், சிட்டினிவெபர், ஆல்மண்ட் போன்ற ஆய்வாளர்களைக் குறிப்பிட முடியும்.

08. தத்துவார்த்த அணுகுமுறையானது
    1. அணுமானங்கள் மற்றும் கருதுகோள்களில் தங்கியுள்ளது.
    2. அரசு என்பது அடிப்படை சமூக உரிமையாகும் எனக் குறிப்பிடுகிறது.
    3. அரசின் கீழ் வாழும் மனிதர்களின் மனப்பாங்கு மற்றும் தனியுரிமையினை அரசியற் சூழலில் கற்பதற்கு உதவுகிறது.
    4. மனிதனின் அரசியல் பொருளாதார வாழ்வினை புரிந்துகொண்டு தொடர்புபடுகிறது.
    5. பாரம்பரிய தத்வத்துக்கமைய பெண்விடுதலையையும் இணைத்துள்ளது.

09. அரசியல் விஞ்ஞானத்துக்கான அணுகுமுறை என்ற வகையில் பெண்ணியல்வாதம் முக்கியத்துவம் பெறுவது.
    1. அரசு பற்றி அதற்கேயுரிய கோட்பாடொன்று இன்மையிலாகும்.
    2. அதில் பல்வேறு சிந்தனைவாதக் குழுவினர் இருப்பதாகும்.
    3. பால்நிலை சமத்துவத்துக்காகப் போராடுவதனை வலியுறுத்தியமைலாகும்.
    4. அரசியல் பற்றிய அடிப்படை வினாக்களை எழுப்பி அரசியல் என்ற எண்ணக்கருவை பரவலாக்கியவையாகும்.
    5. அதற்கு நீண்டதொரு வரலாறு இருப்பதனலாகும்.

10. ஒப்பீட்டு அணுகுமுறை பற்றிய பிழையான கூற்று
    1. அரசியலை ஒப்பீட்டுரீதியாக கற்கும் அணுகுமுறையாகும்.
    2. ஒப்பீடு என்பது 'தொடர்புபடுத்தல்' என பொருள்படும் .
    3. பெறுமாணங்களின் முடிவுகளை உள்ளடக்கும்
    4. அரிஸ்டோட்டில் இம்முறையை பயன்படுத்தியுள்ளார்.

11. பன்மைத்துவவாதம் பற்றிய பிழையான கூற்று
    1. அரசறிவியலுக்கு அப்பால் உள்ள கோட்பாடுகளை ஆராயும்.
    2. குறிப்பிட்ட பாடத்துறையாக இருப்பினும் சமூகத்தின் ஏனைய பிரிவுகளுடன் அரசியலானது கூடிக் குறைந்து தொடர்படும் எனக் கூறும்.
    3. கிரேக்கத்திலிருந்து தற்காலம் பயன்படுத்தப்பட்டுள்ளது.
    4. 1960 இல் அமெரிக்கா பல்லைக்கழகத்தில் விருத்தியடைந்த ஒன்றாகும்.

12. தற்போது முற்றுமுழுதாக மாக்ஸ்வாதக் கோட்பாட்டால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள அணுகுமுறை
    1. ஒப்பீட்டு அணுகுமுறை
    2. அரசியல் பொருளாதார அணுகுமுறை
    3. சமூகவியல் அணுகுமுறை
    4. நடத்தைவாத அணுகுமுறை

13. 19 நூற்றாண்டு அமெரிக்கா பல்லைக்கழகத்தால் பிரக்கப்பட்டு தனியொரு துறையாக வளர்ச்சியடைந்துவரும் ஓர் அணுகுமுறை
    1. பெண்ணியல்வாத அணுகுமுறை
    2. அரசியல் பொருளாதார அணுகுமுறை
    3. சமூகவியல் அணுகுமுறை
    4. பன்மைத்துவவாத அணுகுமுறை

14. நடத்தைவாத அணுகுமுறை கவனத்தில் கொள்வது.
    1. அரசியல் ஆய்வில் நீண்டகால நிலைப்பினைக் கொண்ட அணுகுமுறை.
    2. கற்பனைவாதத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஓர் அணுகுமுறை.
    3. சமூகத்தில் அல்லது தனிநபர்களின் அரசியல் நடத்தைகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் தொடர்பாக ஆய்வு செய்கிறது.
    4. மனித சமூக, கலாச்சார செயற்பாடுகளை ஆய்வுசெய்கிறது.

15. பெண்ணியல் வாதம் என்பது
    1. அரசியல் கருத்தியல் ஒன்றாக 1990 காலப்பகுதிகளில் ஆரம்பமானது.
    2. ஆசிய நாடுகளிலேயே முதலில் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்து வருகின்றது.
    3. பெண்ணியல் வாதிகள் அடிப்படை தந்தைவழி தலைமைத்துவத்தை முற்றாக நீக்குவதாகும்.
    4. ஆண்களுக்கு நிராக பெண்கள் சமூக , பொருளாதார மற்றும் அரசியல் செயற்பாடுகளில் சம உரிமையை வலியுறுத்துகிறது.

(15 x 2 = 30 புள்ளிகள்)

பகுதி I (B)

01. மெய்யியல் ஆய்வில் ஈடுபட்ட அரசியல் சிந்தனையாளர்கள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக

…… …….

02. அரிஸ்டோட்டில் எழுதிய நூலையும் அவரது கல்விக்கூடத்தையும் குறிப்பிடுக.

…… ……..…….

03. 'பொலிடிகோஸ்' என்பதன் பொருள் யாது? இதன் அடிப்படைச் சொல் எது?

…… ……..….

04. அரசியல் தொடர்பாக புராதன வரைவிலக்கணங்கள் இரண்டும் எவை?

……

……

……

……

05. புராதன இந்தியாவிலும் சீனாவிலும் அரசியல் என்பதனை பயன்படுத்திய சிந்தனையாளர்கள் இருவரையும் முறையே குறிப்பிடுக.

…… ……...

06. கிரேக்கத்தில் காணப்பட்ட நகர அரசுகளின் இயல்புகள் இரண்டு தருக

…… ……..….

07. அரசியலை முறைசாரா வழிமுறை மூலம் கற்றுக்கொள்ளும் ஊடகங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

…… ……

08. தத்துவார்த்த அணுகுமுறையை பயன்படுத்திய ஐரோப்பிய சிந்தனையாளர்கள் இருவரின் பெயரைக் குறிப்பிடுக.

…… …….

09. அரசியல் கற்கையில் உள்ளடங்கும் நிறுவனங்கள் இரண்டு எழுதுக.

…… …….

10. வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் இரு தளங்களும் எவை?

…… …….

(10x2 = 20 புள்ளிகள்)

பகுதி II

பின்வரும் எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

01. அரசறிவியல் ஒரு சமூகபயன்பாடுள்ள பாடமாகக் கருதப்படுகிறது ஆராய்க

(10 புள்ளிகள்)

02. கோட்பாட்டரசியலுக்கும் பிரயோக அரசியலுக்கும் இடையிலான வேறுபாடுகளை ஆராய்க.

(10 புள்ளிகள்)

03. அரசியல் கற்கைகளின் பகுதிகளைக் குறிப்பிட்டு ஆராய்க.

(10 புள்ளிகள்)

04. பின்வரும் அணுகுமுறையினுள் இரண்டை விளக்குக

1. விஞ்ஞான (நடத்தைவாத) அணுகுமுறை
2. ஒப்பீட்டு அணுகுமுறை
3. பெண்ணியல்வாத அணுகுமுறை
4. சமூகவியல் அணுகுமுறை
5. பன்மைத்துவவாத அணுகுமுறை

(2x10 = 20 புள்ளிகள்)